**நாத்தாண்டிய பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

-----------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 23 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாத்தாண்டிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய ரூபா 14,163,000 தொகையான 03 காணிக் கூறுகள் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடப்படாத 03 காணிக் கூறுகள் என்பவற்றின் காணிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆதன வரிக்குரிய பிடியாணைக் கட்டணங்கள் சிட்டையிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

ஊழியர் பிணை வைப்பு மற்றும் பிணை முதலீடு முறையே ரூபா 894,226 மற்றும் ரூபா 824,333 ஆனமையால் இந்த இரண்டு கணக்குகளுக்கிடையே ரூபா 69,893 வேறுபாடு ஏற்பட்டிருந்தது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

02 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையிலான காலவீச்சில் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 25,496,371 தொகையை உரிய நிறுவனங்களிலிருந்து அல்லது நபர்களிடமிருந்து அறவிடுவதற்காக சபையினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 2,993,218 தொகையான செலவினக் கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்துடன் இணங்காமைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 158 ஆம் பிரிவு | சபை அதிகாரப்பிரதேசத்தில் ஆதனவரி செலுத்தாது புறக்கணித்த நபர்களுக்குரிய அசையும் சொத்துக்களை தடுத்து வைத்து ரூபா 20,022,285 தொகையான நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 159(1) ஆம் பிரிவு | பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய வாடகை ரூபா 1,079,272 மற்றும் கடை வாடகை ரூபா 398,096 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | |
| i. 59 ஆம் இலக்க விதி | ஒவ்வொரு வருட ஆரம்பத்தின் போதும் சபை அதிகாரப் பிரதேசத்தில் மெய்மையாய்வை நடாத்தி கைத்தொழில்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரித்து உரிய ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 218 ஆம் இலக்க விதி | சபையின் சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 61,381,092 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,466,145 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 16,914,947 இனால் அதிகரித்தமைக்காக ஐந்து வருமான விடயங்கள் ரூபா 23,148,258 இனால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் இறுதியில் சேகரிக்கப்பட வேண்டிய ஆதன வரி வருமானத்தில் 52 சதவீதமும், ஏக்கர் வரி வருமானத்தில் 85 சதவீதமும், ஏனைய வருமானத்தில் 45 சதவீதமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 ஆதன வரி

மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதன வரியான ரூபா 14,421,453 தொகையில் ஆண்டின் போது ரூபா 9,496,349 தொகை மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது. அது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 65 சதவீத அளவாகும்.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து சபைக்கு அறவிட வேண்டியிருந்த முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 133,662,254 ஆகும். அதில் ரூபா 14,970,932 தொகை 1991 முதல் 2010 வரையாக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 20,799,438 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புப் பணம் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக மீளாய்வாண்டின் போது மிகைக்கட்டணமாக ரூபா 47,728 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் சபைக்கு ரூபா 87,500 தொகை மிகைக் கட்டணமாக விதிக்கப்பட்டிருந்தது.

(இ) வாராந்த சந்தை வாடகைக்கு வழங்குதல், ஆதனவரி மற்றும் கடை வாடகையாக 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை நான்கு நபர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 502,997 பெறுமதியான காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சபை தவறியிருந்தது.

(ஈ) நாத்தாண்டியா பிரதேச சபையினால் 2014 திசெம்பர் 19 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் iv (ஆ) பந்தியின் பிரகாரம் வருமானம் சேகரித்தல் தொடர்பாக பகிரங்கப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வருமானம் சேகரித்தல் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்காமையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிரந்தர அறிவித்தல் பதாதைகளிலிருந்து 2016 ஆம் ஆண்டின் போது எந்த வருமானத்தையும் சேகரிக்க முடியாதிருந்தது.

(உ) நாத்தாண்டிய பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் பிரதான வீதி கி.மீற்றர் 35 அளவில் வியாபித்திருந்ததுடன் அதில் 03 கிலோமீற்றர் தூரம் ஒரு பகுதி மாத்திரம்

பொருத்தப்பட்டிருந்த அறிவித்தல் பதாதை தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது 42 அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 99,000 தொகையான வருமானமொன்றை சபை இழந்திருந்தது.

(ஊ) காணிகளைக் கூறிட்டு விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்காக சபைக்குக் கிடைத்த காணிக் கூறுகள் மெய்மையாய்வுச் சபையின் மூலம் மெய்மையாய்வு செய்யப்பட்டு உரித்தை உறுதிப்படுத்தி பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1994 முதல் 2014 வரை ஊழியர் பிணை ரூபா 91,694 தொகை வங்கிக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டை விட நடப்பாண்டின் சிட்டையிடப்பட்ட அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 3,868,091 இனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் 07 மாத காலத்தில் 285 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 31 வரையிலும் 09 கட்டிடங்களுக்காகவே மாத்திரம் தரச்சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. தரச்சான்றிதழ் பெறப்படாது நிர்மாண நடவடிக்கைகளுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக்காலம் நீடித்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் சபையினால் அது தொடர்பாக பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மாடு அறுவைக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணியைக் கொள்வனவு செய்வதற்கு 04 நபர்களுக்கு ஒருவருக்கு ரூபா 150,000 வீதம் ரூபா 600,000 முற்பணமாக 2002 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அந்த காணிகளின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது அந்த பணத்தை மீள அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புத்தளம் மாவட்ட செயலாளரின் விலைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கியூப் கிரவலின் விலை ரூபா 1,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு முரணாக நாத்தாண்டிய பிரதேச சபையினால் 01 கியூப் கிரவலுக்காக ரூபா 2,300 முதல் ரூபா 3,600 வரை 04 கூறுவிலைகளின் கீழ் 964 கியூப் கிரவல் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,191,712 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கிரவல் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் பதிவேட்டின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் 7½ மாத காலத்தில் 883.9 கியூப் கிரவல் வீதிகளுக்கும் கழிவுப்பொருள் குழிகளுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையின் படி நிறைவேற்று தரத்தில் ஒரு வெற்றிடமும், இரண்டாம் மற்றும் ஆரம்பம் ஆகிய இரண்டிலும் மொத்தமாக மிகைப் பதவியணியினது 86 ஆகவும் இருந்தனர்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவினத்தில் 196 சதவீத முரண் ஏற்பட்டிருந்தமையால் பாதீட்டு மதிப்பீடு கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக சபையின் நடவடிக்கைகளின் போது பயன்பாடுடையதாக இருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பீஎப்டீ/ஆர்ஈடீ/01/04/2014/01 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | காணி மற்றும் கட்டிடங்களின் இருப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கடன்பட்டோர் | பழைய கடன்பட்டோர் மீதியை அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கடன்கொடுத்தோர் | பழைய கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) ஊழியர் கடன் | அறவிடப்படாமல் காணப்படுகின்ற உழியர் கடன் மீதி தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) பாதீடு | துல்லியமான பாதீடொன்றைத் தயாரிப்பதற்கு தவறியிருந்தது. |
| (ஊ) உள்ளகக் கணக்காய்வு | சரியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக தேவையான தகவல்கள், நிலுவை வருமானத்தைச் சேகரித்தல், மாற்று வருமான வழிகளை அறிமுகப்படுத்தல், வேலை உத்தேசத் திட்டம் மற்றும் செயற்திட்டங்கள் என இவற்றின் செயல்முன்னேற்றத்தைக் கண்டறிதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |